# வாக்குமூலம்
# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்
# வழக்கு எண்: CC –93/2019

## வழக்கு சாட்சி :PW4(LW7)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | விஜயகுமார் | | : | |
| தந்தை பெயர் | : | பாலமுத்து | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | பெரியகுரும்பம்பட்டி | சமயம் | : | |
| தாலுக்கா | | | வயது | : | 59 |

Solemnly affirmed by Thiru. AbrahamSelvin , JA of this Court in accordance with the provisions of Act X of 1873

**எதிரி ஆஜர்**

**Solemnly affirmed in accordance with the Indian Oaths Act–1969 Section –6(2) on** the **day 23th day of January 2026.**

**As Per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No. 74663/2024/F1 – Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**
**Aathar Card of the Witness verified.**

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை :–**

நான் தற்போது பெரியகுரும்பப்பட்டியில் குடியிருந்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 24.06.2018 ம் தேதி காலை 06.30 மணிக்கு நானும், ஊர் ஆட்களும் இலுப்பூர் காவல் நிலையத்திற்கு சென்றோம். எங்கள் ஊரில் உள்ள அய்யனார் கோவிலில் முதல்நாள் நடந்த திருட்டு சம்பவம் தொடர்பாக காவல் நிலையம் சென்றோம். பூசாரி கருப்பையா என்பவர் பணம் ரூ.2200 சில்லரை மற்றும் கத்தி, இரும்பு கம்பி, ஒரு Hero Honda , வண்டி ஆகியவற்றை காவல் நிலையத்தில் ஒப்படைத்தார். அவர் ஒப்படைக்கும் போது நானும் , ஊர்ஆட்களும் கையொப்பம் செய்தோம். போலிசார் என்னை அன்று விசாரித்தனர்.

**எ.த.கு.வி**

1. பெரிய குரும்பப்பட்டி ஊர் முக்கியஸ்தர்களில் நானும் ஒரு நபர் என்றால் சரிதான். கோவில் உண்டியலை உடைத்த தகவல் குறித்து எனக்கு அன்று இரவே தெரியுமா என்றால் தெரியும். அப்போது இரவு நேரம் என்பதால் சுமார் 20,25 நபர்கள் இருந்ததிருபபார்கள் என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய இடத்தில் இருந்து குற்ற சம்பத்தில் ஈடுபட்டதாக சொல்லக்கூடிய நபரை அங்கிருந்த சுமார் 20,25 நபர்கள் ஊர்க்காரர்கள் அனைவரும் காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம் , அப்போது அங்கிருநத அனைவரிடமும், போலிசார் கையெழுத்து கேட்டார்கள், நாங்கள்அனைவரும் கையெழுத்து செய்தோம் என்றால் சரிதான். நாங்கள் கையெழுத்து செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்து என்ற விவரம் எனக்கு தெரியாது

என்றால் சரிதான். அதன் பின்னிட்டு போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் ரூ.2200 சில்லரை காசில் எத்ததனை 10 ரூ ,5 ரூ ,2 ரூ ,1 ரூ என்று எத்தனை நாணயங்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.